**செயற்பொறியாளர்,நீ.வ.து.,நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டக்கோட்டம், வள்ளியூர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: பொறி.அ.ஆக்னஸ்ராணி,பி.இ.,**
**செயற்பொறியாளர்.நீ.வ.து.,**

**செயல்முறை ஆணை எண்: இ3/ 1133 /2023/நாள்: 16 .07.2024.**

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அரசு அமைச்சு பணி தொகுதி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு - திருமதி.ரா.ரம்யா (பிறந்ததேதி 12.03.1986) இளநிலை உதவியாளர் - இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலர்,தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை, கடித எண்: 1970/ PSD-D2/ 2023/நாள்: 31.08.2023.
2. முதன்மை தலைமைப் பொறியாளர், (ம) தலைமைப் பொறியாளர் (பொது) நீவது., சேப்பாக்கம், சென்னை அவர்களின்செ.மு.ஆ.எண் : எஸ்3(3)/35336/2023 / நாள்: 22.09.2023.
3. தலைமைப் பொறியாளர்,நீவது., மதுரை மண்டலம், மதுரை அவர்களின் செ.மு.ஆ.எண்:அ1/11056-3/2023/நாள்: 03.10.2023.
4. கண்காணிப்புப் பொறியாளர்,நீவது., திட்டங்கள் வட்டம், திருநெல்வேலி அவர்களின் செ.மு.ஆணை.எண்.ப2/2174/ 2023/நப 1 வரு/நாள். 05.10.2023.
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். 1133/இ3/ 2023 நாள்:09 .10.2023.

-------

பார்வை (1)ல் கண்ட செயலாளார், தமிழ்நாடு அரசு பணியாளார் தேர்வாணயம், சென்னை அவர்களின் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு பணிவேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பார்வை (2)ல் கண்ட முதன்மை தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் பொது. (பொபது) நீவது., சேப்பாக்கம்,சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி இக்கோட்ட அலுவலகத்திற்கு பணி அமர்வு செய்யப்பட்ட திருமதி.ரா.ரம்யா, இளநிலை உதவியாளர் பார்வை (3) முதல் (5)ல் கண்ட செயல்முறை ஆணைகளின்படி 09.10.2023 பிற்பகல் இவ்வலுவலகத்தில் பணி மேற்கொண்டார்.

முதன்மை தலைமைப் பொறியாளர்,மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது) நீ.வது., சென்னை, மற்றும் தலைமைப் பொறியாளர்,நீ.வ.து., மதுரை மண்டலம்,மதுரை அவர்களின் செயல்முறை ஆணைகளில் தெரிவித்துள்ளபடி,இந்த பணிநியமன ஆணையானது தொகுதி IV நேரடி நியமனம் தொடர்பாக “மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற சென்னை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டது” என்ற நிபந்தனையுடன் திருமதி.ரா.ரம்யா, இளநிலை உதவியாளரின் பணியினை தமிழ்நாடு அரசு பணியாளர் (பணிநிபந்தனைகள் சட்டம் -2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016 விதி 28(1))-ன்படி அவர், இளநிலை உதவியாளர் பதவியில் பணி மேற்கொண்ட நாளான 09.10.2023 பி.ப முதல் அன்னாரது தற்காலிக பணிகளை பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் தனியரின் தகுதிகாண் பருவம் மூன்றாண்டு தொடர்பணியில் இரண்டாண்டுகள் பணிக்காலமாக நிர்வகித்து 09.10.2023 பிற்பகல் முதல் தகுதிகாண் பருவம் தொடங்க ஆணை வழங்கப்படுகிறது.

இவர் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

16/07/24

செயற்பொறியாளர்,நீவது,
நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டக் கோட்டம்,
வள்ளியூர்.

16.7.24

**பெறுநர்**
திருமதி.ரா.ரம்யா,
இளநிலை உதவியாளர்,
கோட்ட அலுவலகம்,
வள்ளியூர்.